# காமிக்ஸ் சின்ன தம்பி

# ஈடியும் சில
# ஃபேக் ஐடியும்



இந்த புக் ரெகுலர்
சந்தாவில் வராது.

சிரிக்க மட்டும்
சீரியஸா எடுத்துகாதிங்க

ஹாய் காமிரேட்ஸ்
உங்களுக்கு வெனிசுலாவின் வரலாறு தெரியுமா? 1400ம் வருடங்களிலே ஸ்பெயின் நாட்டிலே .
என்று நீட்டி முழங்கும் கி.நா இது கிடையாது. அப்போ இது என்னன்னா ஈரோடு நோக்கி புதையல்
தேடி செல்லும் கப்பலும் சில காமிரேட்ஸும் நிறைந்த மொக்க கதை.. ஹி ஹி..

இவர் உண்மையான பெயர் பெரியசாமி. ப்ரின்ஸ் மீது கொண்ட பற்றால் பெயரை மாற்றி கொண்டார். கேப்டன் என்ற பேருக்கு ஏற்ப ஒரு பழைய கப்பலை வாங்கி வைத்து கொண்டு நாடுநாடாக சென்று பழைய காமிக்ஸை மலிவு விலையில் வாங்கி கொண்டு வருவார்.

**காமிக்ஸ் சின்ன தம்பி**



இவரது சொந்த ஊர் மதுரை பக்கத்துல உள்ள சிம்மக்கல். தோர்கல் புக்கை படிக்க இப்படி ஆயிட்டார். அடிக்கடி செவ்விந்தியர்களுக்கு மட்டும் புரியும் சங்கேத பாஷையில் பேசுவார். கேப்டன் ப்ரின்ஸோடு காமிக்ஸ் சேவை ஆற்றி வருகிறார

**கேப்டன் பிரின்ஸ் பெரியசாமி**



இவர்தான் காமிக்ஸ் சின்ன தம்பி.
புதிய இளம் வாசகர். வலைப்பூவில் மௌன வாசகர்.
நமது கதையின் முக்கியமான ஆளு.
எவ்வளவு பெரிய சீனியர்
வாசகரையும் கலாய்க்கும் பேர்வழி.



**சிம்மக்கல் தோர்கள்**

**டாக்டர் லங்கோடு**



முரட்டு குடிகாரர்.
மஞ்ச சொக்கா ரசிகர்.
பேருக்கு மட்டும் டாக்டர்.
மஞ்ச
சொக்காவை கலாய்த்தால்
கடுப்பாயிடுவார் மனுசன்.



**சிங் மாங் சங்**

ப்ரின்ஸ் கப்பல் சமையல்காரர். மங்கா காமிக்ஸ் வாங்க வந்தவரை மாங்காவை கையில் கொடுத்து சமையல்கட்டில் விட்டுவிட்டார்கள். உருளைக்கிழங்கும், வறுத்தக்கறியும் இவரது ஸ்பெஷல்.

**மியாவ்**



அந்த தலைப்பு போட்ட புக்கையே நாம படிக்க மாட்டோம் என்பதால் இது பத்தி அறிமுக தேவையில்லை. சில சீன்கள்ல வரும்.. அவ்ளோதான்.

**விஸ்வாசி** **கேப்டன் கும்பர்க்கீ** **காமிக்ஸ் காஸ்குஸ்**



இவர்தான் காமிக்ஸ் காஸ்குஸ். எந்த ஊருல எந்த பழங்காமிக்ஸ் மலிவா கிடைக்கும்னு கண்டுபிடிச்சு ஆந்தைவிழியார்கிட்ட சொல்றதுதான் இவர் வேலை.

இவர் கேப்டன் கும்பர்க்கீ. ஆந்தைவிழியார் சொல்ற இடங்களில் காமிக்ஸ் தூக்குறது. புத்தகவிழா ஸ்டால்களை வாசகர்களை வைத்து அழகுபடுத்துவது இவர் வேலை.

இவன்தான் விஸ்வாசி. ஆந்தைவிழியார் எந்த ஏரியால புக்கு தூக்குனாலும் "திஸ்ஸு முஸ்ஸு" கடிதங்கள் எழுதி ஆந்தைவிழியாரின் எதிரியான கோல்டு ராஜ் கோணப்பனுக்கு உளவாளியாக வேலை பார்ப்பான். இதற்காக வெளிநாட்டு காமிக்ஸ் கடைகள் இவனுக்கு அவார்ட் குடுத்திருக்கு.



இவர்கள்தான் வாசகர்கள். இதில் வாசகர், மௌன வாசகர், வலங்காமிக்ஸ் விசிறி அனைவரும் அடங்குவர். அடிக்கடி அவர்களுக்குள்ளேயே ஃபைனலில் சண்டை போட்டு கொள்வார்கள். ஈரோட்டில் பார்த்தால் கடலை மிட்டாய் தின்று கொண்டு கடலை போட்டு கொண்டிருப்பார்கள். மொக்கக்கதில் இது தானா சேந்த கூட்டம்.



கட்டக்கடைசியாக இன்னும் மூனு பேரு இருக்காங்க
முதலாவது ஆள் உட்காரும் சிங்கம்: பழங்காமிக்ஸ் சேகரிப்பாளர்.

இரண்டாவது ஆந்தைவிழியார்: பொம்மை புக்கு விக்கிறவர்

மூன்றாவது கோல்டு ராஜ் கோணப்பன்: க்ரே மார்க்கெட் மாஃபியா


இதுதான் புத்தகவிழா நடக்க போற எடம் மன்னா. நம்மகிட்ட நிறைய டைட்டில்ஸ் இருக்கு. இந்த முறை அவெஞ்சர்ஸ்க்கு சவால் விடும் அளவுல கல்லா கட்டலாம்.
ஈரோடு மீட்டிங்குக்கு பணிகள் ஜரூராய் தொடங்கிய நேரமது
தம்மாத்துண்டு புக்கு இம்மா ரூபாயா?
நம்ம தலையில மிளகா அரைக்க பாக்குறார்
எனக்கு போன வட்டம் சந்தா எண் தராம டபாய்ச்சிட்டாங்க
எனது கமெண்டிற்கு எடிட்டர் பதில் சொல்லவில்லை
கேப்டன் கும்பர்க்கிய நம்ம காமிக்ஸ் பாய்ஸை அழைச்சிக்கிட்டு உடனே ஸ்டாலை அலங்கரிக்க போக சொல்லுங்க. இந்த முறை ஸ்பெஷல் வெளியிடுறோம், முட்டை பப்ஸ் உண்டுன்னு விளம்பரம் பண்ணுங்க!
இந்த தடவை ஈரோட்டுல கூட்டம் குவியணும். பசங்களை ட்ராவலர்ஸ் கப்பல் ரெடி பண்ணி கொண்டாந்து ஈரோட்டுல இறக்குங்க!
ஸ்பெஷல் வெளியிடுறோமா? உடனே லீக் ஆகுமே போய் அறிவிச்சு போட்டுடணும்.
அந்த பக்கம் காமிக்ஸ் கண்மணிகள் ஈரோட்டில் புத்தகத்தை பெற்றுக்கொள்ள முன்பதிவு செய்துக் கொண்டிருந்தார்கள்.
சார் ஈரோட்டுல ஸ்பைடர் கலெக்ஷன் குண்டு புக்கு கிடைக்குங்களா?
எதுவா இருந்தாலும் மீட்டிங்ல கேளுங்க பதில் கிடைக்கும்.
உங்க பெயரை முன்பதிவு பட்டியலில் சேர்த்தாச்சு. அடுத்து யாரு
இதற்கிடையே இருளில் மர்மமான போலி ஐடி உருவம் ஒன்று போட்டுக்கொடுக்க பறந்து கொண்டிருந்தது.
ஆனா ட்ராவலர்ஸ்காரன் ஒரு காமிக்ஸ் விசிறியாச்சே! ஒத்துக்க மாட்டானே!


சார் இங்க டிங்கோ சாந்தி கப்பல் ஆபீஸ் எங்க இருக்கு
நேரா போய் ரைட்டுல திரும்பு
ஒருவழியா பொக்குல நுழைஞ்சிட்டேன்
சாரி சார் புக்கில் சிபுக்கு வேற இடம் பாருங்க
விஸ்வாசி சென்சார் பண்ணாத மாடல்படி, சலிதா பாபி காமிக்ஸு களை கொடுத்து ட்ராவல்ஸ் காரர்களை மடக்கி கொண்டிருந்தான்.
ஹலோ காமிரேட்..
இந்தா ஓசி பிடிஎப்.. இதை எடுத்துக்கிட்டு ப்ளாக்ல போய் திட்டி கமெண்ட் போடு. இல்லைனா சொறுகிடுவேன்.
ஆஹா.. இந்த கருப்பு தோட்டத்தில் மாயாவி புக்கை எத்தனை நாளா தேடுனேன் தெரியுமா?
ஹெல்ப் மாடல்படி
மின்ட் கண்டிசன் புக்கு விற்பனைக்கு விருப்பமுள்ளவர்கள் உள்ளே வரலாம்
எல்லா ஊர்களிலும் விஸ்வாசி வேலையை காட்டினான்
உனக்கு ஒரு பழங்காமிக்ஸ் கூட கிடைக்காது.. ஹெல் மாடல்படி
ஒரு காயலான் கடையினுள்
காமிக்ஸ் இருக்குன்னு வர சொன்னீங்களே?
இப்பதான் ஒருத்தர் கணிசமான தொகை கொடுத்து வாங்கி போனார்.
கப்பலும் கிடைக்கல.. காமிக்ஸும் கிடைக்கல என்ற நிலையில் கேப்டன் கும்புர்சி முன்பதிவு செய்ய வந்து கொண்டிருந்தார்.
தம்பி இங்க சிறுக்கு சிங்காரி கப்பல் எங்க இருக்கு?
சாரி சார் நான் ஊருக்கு புதுசு.. எனக்கு தெரியாது!
வாங்க சார் இதுதான் நீங்க கேட்ட சிறுக்கு சிங்காரி!



தம்பி பழங்காமிக்ஸ் சேகரிக்க ரகசிய தீவு போக ஒரு கப்பல் வேணும்.
எங்க கேப்டன் ஒரு காமிக்ஸ் விசிறிதான். ஆனால் அவர்கிட்ட அனுமதி கேக்கணும்.
ஏனா அவர்தான் சிலுக்கை வெச்சிருக்கார்.
இந்தாப்பா இதில அவருக்காக சில பரிசுகள் வெச்சிருக்கேன்.
பரிசா? அப்டின்னா ஸ்டால் பணிகளை செய்யக்கூட ஒத்துப்பார்.
ஏ தம்புடு ஒக்கே நிமிசம்...
நான் ஒரு வெளிநாட்டு காமிக்ஸ் வாசகர். சகாய விலையில் ஏதாவது காமிக்ஸ் கிடைக்குமா?
ஒரு புத்தகத்தின் விலை ஐந்து இலக்கங்களில். என்ன ஓகேவா?
ரெண்டு ரூவாய்க்கு வித்த புக்கு லட்ச ரூபாயா?
விருப்பமில்லைனா போ மேன். எங்களுக்கு அகோரடு போற சோலி கிடக்கு.
ஸ்பைடர் மாதிரி டுமாங்கோலி கதையெல்லாம் நீ ரசிச்சு கேப்பியா?
கிராபிக் நாவலுக்கு அது எவ்வளவோ தேவலாம்யா..
பாஸ் இது என்னன்னு தெரியுதா?
ஆம். இது முன்பதிவர்களுடைய அபூர்வ இயர்லி பேர்ட் பேட்ஜாச்சே!
இனி மீ டு பர்ஸ்ட் போடுறதுக்காக ப்ளாகில் காத்துக்கிடக்க அவசியமில்ல






(*இது ஒரு சீன பாஷை கிண்டல்)



முன்பதிவு செய்தோரும், பிளாக் பாய்லாம் கும்புர்க் தலைமையில் குவிந்தனர்.
சார் இங்க பத்து ரூபா பழைய காமிக்ஸ் கடை எங்க இருக்கு?
நல்ல கனமான பர்ஸோ? நேரா போய் லெஃப்ட்டு திரும்பு.
சார் சார் காமிக்ஸ் புக்கெல்லாம் காலி. ராஜேஷ்குமார் கதைதான் இருக்கு
JAN DONCK
அதேசமயம் மூஞ்சுபுக்கில் சுற்றித்திரியும் டைகர், கி.நா பாய்களை கவிழ்க்க சுழுமி காற்று விரைந்தது பெரியசாமி குழு
கடல்ல ஒரே கருப்பு மசியா இருக்கு
இது கி.நா ரசிகர்கள் எச்சரிக்கை செய்ய உபயோகப் படுத்தறது.
பாஸ் ஒரு கி.நா படிச்சு அப்படியே தலை சுத்திடுச்சு
எல்லாரும் உஷாரா இருங்க..
கவலைப்படாதீங்க இந்த டெக்ஸ் மந்திர மசி முன்னாடி ஒரு பய நிக்க முடியாது.
ஆ ஆ ஆ-
PANG
BLONG
நீ எந்த புக்கை படிச்சே?
ஒரு ஜிப்பாவின் நினைவுகளில்..
தாக்கு.. அட்டாக்கு..
அவங்க கி.நா ஆதரவு போஸ்டுகளை எடுத்துக்கிட்டு வராங்க
ஒரு பயலையும் உடாத. கமெண்டுகளை போட்டு தாக்குங்க.. வோட் மோர் பண்ணுங்க.
சார் காமிக்ஸ் ரசனைனா அப்படி இப்படித்தான் இருக்கும்.
நீதானா நித்திரை மறந்த நியூயார்க் சூப்பர்னு சொன்னா?
டெக்ஸ் வாழ்க.. மாயாவி வாழ்க..



சார் விட்டுடுங்க ப்ளீஸ்
இனிமேல் பழங்காமிக்ஸ் டீட்டி போஸ்ட் போட்டால் தோலியை உரிச்சுடுவேன்
இது கரிமண்டு போட்டதுக்கே ப்ளாகை விட்டு ஓடிட்டாங்களே!
உங்க ஆளுங்க கலக்கிட்டாங்க சின்ன தம்பி
பாக்கத்தானே போறீங்க இந்த சின்ன தம்பி ஆட்டத்த..
ஒரு மிகப்பெரிய லோட் மோர் யுத்தத்துக்கு பிறகு கோவில்பட்டி கடலை மிட்டாய் பாக்கெட்டுகளையும் , கிநா பாம்ஸ் கப்பலையும் இழுத்துக் கொண்டு ப்ளாக்பாம்ஸ் படையை அடைந்தது சிலுக்கு சிங்காரி கப்பல்.
காமிக்ஸ் முழக்கம் கேக்குது. நம்ம நெருங்கிட்டோம்..
மாமரத்து அடியிலே மாட்டுவடி மடியிலே
ஜூலியா புக்கில சில்பான்ஸ் சீன் வராதா?
ஏன் டோனியா காட்டுனா பாக்க மாட்டியாக்கும்?
ஆஹா.. என்ன ஒரு கிலபான்மையான இசை
இவங்கதான் காண கிடைக்காத அரியவகை காமிக்ஸ் ரசிகர்கள்
லக்கா காமிக்ஸ் ட்ரான்ஸ்லேசன் 2 வாங்கி குடுங்களேன்.
சித்திரக்கதை மரபுப்படி பஜனை நிரப்புறதுக்காக உங்களை அறிமுகப்படுத்தி வைக்கிறேன்.
குரட்டு கும்புரி நீயா?
பீத்தல் பெரியதாய்??
நான் காண்பது கனவா? சீன் டின் கேனை விட கேனையா ஏதோ தெரியுதே
இவந்தான் பன் டின் கேன். இவன் கழுத்துல இருக்குற டின்னுல எப்பவுமே நாலு பன்னு இருக்கும்..
ரொம்ப நல்ல பயல்..
இதுக்கு சீன் டின் கேனே தேவலாம் போல!
TAP TAP
பன் டின் கேன்னு சொன்னா கேக்க மாட்டான். பய வேதாளர் ரசிகன். டெவில்னு கூப்பிட்டா செஞ்சுவாமிடுவான்.
ஹாலோ டெவில்.
KLANG


ஸொக்ல போஸ்ட் போட்டாச்சு எல்லாரும் ஓடியாங்க!
மீ த பர்ஸ்ட்...
மீ த 420+
சார் இம்மாத புத்தகங்கள் சூப்பர்.
ஆனா கிநா மட்டும் வேணாம் சார்.
சார் கிநா ஒரு அற்புதமான.. ஆஹ!
எங்கே மீபேக் ஓடி அடிய போட்டீங்களேடா!
வீராப்பா ஏறிட்டியே! கப்பலை ஓட்ட தெரியுமா?
தெரியாது என்னா இப்ப
உங்களுக்காவது எப்படி கப்பலை ஓட்டணும்னு தெரியுமா?
பராகுடா நாங்களும் படிச்சிருக்கோம் அப்பு
நான் ஈரோட்டுக்கு முதல் முறையா வரதால அது பத்தி சொல்லுங்களேன்.
சண்டை மட்டும் போட்டுக்காதீங்கப்பு.
நொறுக்கு தீனி சாப்பிடுவோம்.
அப்புறம் சாப்பாடு சாப்பிடுவோம்
உச்சிலேர்ந்து பார்த்தா ஈரோடு தெரியுமாயே!
ஆத்தீ என்னைய தொரத்தி வராய்ங்களே!
மேல ஏறி நம்ம சங்கேத குறியீட அனுப்பு.
முதல்ல மீட்டிங்கை மறக்காம நகந்து உக்காருய்யா!
தம்பி அந்த கடலைமிட்டாயை எடு.
ரெடி ஆயிட்டீங்களா! இப்போ பாருங்க என் வேலையை.




ஆஹா.. எவனோ ஸ்வீட் பாக்஁ஸை லவட்டிக்கிட்டு போறான்..
ஆத்தி.. என்னாது இது..
மீ எலே.. யாருலே நீ..
ஒழுங்கா ஸ்வீட் பாக்ஸை குடுத்துடு மகனே!
டூம்ம்ம்ம்ம்ம்.
KRACH
TSCHING
PENG
ZISCH
அடேங்கப்பா.. சிவகாசில இருந்து பட்டாசு பார்சல் வந்திருக்கும் போல!
டெக்ஸ் வாழ்க
ஆமா ஜீ!
PPB 28



சிறுக்கும், கீதா கப்பலும் ஈரோடு பயணத்தை தொடங்கின.
இந்த கப்பலில் கீதா வாடை அடிக்குது
அய்யோ எனக்கு தலையை சுத்துது.
ஒரு எழவும் புரியலை.
எனக்கும்தான்.
சின்ன தம்பி கருங்கும்பலா தெரியுதே என்ன அது?
பனாக்மார்க்கெட் புயல்
அய்யோ எனக்கு கலக்குதே!
இது காமிக்ஸ் கடலல்ல சகாரம்தான்.. ஏமாறாம இருந்தா புக்கை காப்பாத்திக்கலாம்..
ஈரோடு போறதுக்குள்ள கையில் இருக்க புக்கு காலி ஆயிடும் போலவே.
நான் வரேன்.
நானும் வரேன்..
நான் வரலை
அதே சமயம் கோல்டு ராஜ் அவர்கள் ரவுண்டு கட்டி செயிண்டில் திட்டியதில் கடுப்பில் இருந்தான்..
உன்னால ஒரு காரியமும் ஆகல.. நானே நேரா கோதாவுல குதிக்கிறேன்
இந்த பக்கமா போய் நாம எடி பேர்ல ஃபேக் ஐடி ரெடி பண்ணி கமெண்ட் போடுவோம்.
காமிக்ஸ் கடலோ கொந்தளித்து கொண்டிருந்தது.
ஏ.. அங்க பாரு ரத்தப்படலம் பிடிஎஃப்
அட அதுக்குள்ள வந்துட்டே...
நான் அதை வாட்ஸ் அப்ல ஷேர் பண்றேன்
ஓ- ஷ்யூர்
எடியார் அறிவிப்பு.. பிடிஎஃப் போட்டு விற்பனையை பாதிக்காதீர்கள்



அப்புறம் வெளிநாட்டு வாழ் வாசகர்கள் எப்படி படிக்கிறதாம்?
அதுக்கு சிவகாசிலயே குண்டு புக்கு போட்டு பெத்த ரேட்டுக்கு தருவாங்க.
ஆ.. என் காமிக்ஸு..
நனைஞ்சு போச்சு
அதே நேரம் சிறுக்கு கப்பலில்.
காபி குடிக்கிற நேரத்தில யார் தேன் அது.
காபி குடிக்கிற வினையில் காமிக்ஸாவது வாங்கியிருக்கலாம். ஏதோ அசம்பாவிதம்
எங்க நம்ம கூட வந்த சின்ன கப்பலை காணோம்
வந்துடுவாங்க..
அடேய் சின்ன தம்பி ஏதாவது பிரச்சினையா?
படகில யாராவது இருக்கீங்களா? பதில் சொல்லுங்க..
இந்த போட்டோவுக்கு கேப்டன் போட்டோ சந்தா கிஃப்ட்!
சந்தா பட்டுஜட்ல துண்டு விழு.. இன்னொரு சந்தாரேன எவனாவது சீப்பனா பண்றானா? ஏலேய் சின்ன தம்பி!
BRAOUMBROUMBRAOUM
நாங்க நல்லா இருக்கோம் பாஸ்.. மீட்டிங் தொடங்கறதுக்குள்ள வந்திடுவோம்
காமிக்ஸுக்கு ஜே..
அவசரப்பட்டு ஸ்னாக்ஸை காலி பண்ணிடாதீங்க.
கடலையமிட்டாய் காலி ஆகப்போகுது
எப்படியாவது தாக்கு பிடிங்க ஈரோடு போயே ஆகணும்
சங்கிலி கருப்பே..
காமிக்ஸ் வாழ்க
யோவ் வந்து ஒரு கை குடுய்யா..
KLONK KLONK KLONK KLONK KL
ஒரு கை குடுக்க நான் என்ன பெஞ்சரா?
ஜெயன் பேரலை படிச்சா மாதிரி கிறக்கமா இருக்கே
அடப்பாவிங்களா எல்லாரும் கிறாவல சோர்வு அடைஞ்சிட்டாங்க
ஆமா
நான் மெல்ல திறந்தது கதவு..


ஒருவழியாக ஃபேஸ்புக் பஞ்சாயத்துகள் முடிந்து சுரோடு சென்ற கப்பல்களை போஸி இடிக்கள் வழிமறித்தனர்.
நீ அந்த காமிக்ஸ் பாய்ஸ் சுரோடு நோக்கி முன்னேறிகிட்டு இருக்காங்க
ஆடி பெருக்குக்கு ஊருக்கு போவாம சுரோட்டுல என்ன வேலை?
நொட்ட கடுதாசி அனுப்பியும் சுரோடு போறாங்கன்னா என்ன திமிறு?
அதானே கடுதாசிக்கே கணிசமா செலவு பண்ணியிருக்கேன்.
இன்னைக்கு ஒரு கை பார்த்துடலாம்
பாஸ் அது சின்ன வாசக வட்டம்
அவங்களுக்குள்ள சண்டைய மூட்டி விட்டுடலாம்
இன்னும் கொஞ்ச நேரத்துல கமெண்ட் போட ஆரம்பிக்கிறோம்க
உடனே போஸி இடிய ஓப்பன் பண்ணுங்க. கமெண்ட்ல கலாய்ங்க.
ஜெய் பரட்டை...
ஜெய் ஜெயமாலினி..
அதேநேரம் ப்ளாகில்..
யாரோ சம்பந்தமில்லாமல் கமெண்ட் போடுறாங்க
அந்த போஸி இடிக்காரனுங்க சூழ்ச்சி
எல்லாம் கமெண்ட் செக்ஷன் வாங்க..
சங்களை இன்னைக்கு செம ரைடு பண்ணிடலாம்
நம்ம ஆட்கள் எல்லாம் தயாரா இருங்க..
வீ த பர்ஸ்ட்..


போலி இடி தேசத்தினர் போருக்கு தயாராக இருந்தார்கள்.
அவங்களோட சிலுக்கு கப்பலும், அதோட கேப்டன் பெரியசாமியும் இருக்கான்.
பெரியசாமி கிமெண்ட்ல கவாய்க்கிறதுல ஜித்தன்.. ஜாக்கிரதையா இருங்க.
போடுங்கடா நம்ம தீம் மியூசிக்கை.
என்ன எழவு பாட்டு ஒன்னும் புரியலை.
நம்மளை அட்டாக் பண்ண போறதை சூசகமா சொல்றாய்ங்க.
சிலுக்கு சிரிக்க வந்தா சீனா தானா டோய்.
இரத்தத்தை உறைய வைக்கும் அந்த பாடல் மற்ற வாசகர்கள் காதையும் எட்டியது.
அது என்ன எழவு பாட்டு.
போலி இடிக்களின் போர்முழக்கம்
போலி இடிக்களா?
அவங்க நெறைய பேர் வந்திட்டிருக்காங்க பாஸ்
பசங்களா ஜஸ்தி..
கப்பலை வேகமா ஓட்டுங்க..
பழங்காமிக்ஸ் பவரை நாம காட்டணும்..
மஞ்ச சட்டை வாழ்க..
மாயாவி வாழ்க..
உங்களுக்கு கேக்குதா..?
ஏதோ சிலுக்குன்னு கேக்குது
சிலுக்க போட போறாய்ங்களாம்
ஆபாசமான இந்த வார்த்தைகளை சென்சார் பண்ணி விடு மாரிடோ
நெருங்கிட்டோம்.
நம்மகிட்ட இருக்க பழைய காமிக்ஸ ஆட்டைய போட நினைக்கிறாய்ங்களோ?
இது காமிக்ஸ் கோட்டை இங்கேர்ந்து அவங்க எதையும் கொண்டு போக முடியாது..
பாய்ஸ் நம்ம காமிக்ஸ் வாழ்க்கைக்கு ஒரு ஆபத்து வந்திருக்கு. நாம் நமக்குள்ள இருக்க சண்டைகளை மறந்து ஒன்று சேர்ந்து அவங்களை எதிர்த்தாகணும்.. உங்க திறமைகளை காட்ட வேண்டிய தருணம் இது
டெக்ஸ் கதையை படிச்ச நல்ல ஃபார்ம்ல இருக்கேன்
இது யார்கோ வின்ச் கத்தி.. இதை வெச்சு இன்னைக்கு..
என் முன்பதிவு ரசீதை காணோம்
என் கோடாரி எங்க போச்சு?
பெருந்தேவன் மானிடோ நமக்கு துணை நிற்பாராக!


சிகப்பழும் ஓலமிட்ட போலி இடி
கப்பல் சிலுக்கையும், கிரனையும் பலாகில் நொருக்கியது.
தாக்குங்க.
அடி ஒழிக. ஜாஸ்ரா பாய்ஸ் ஒழிக.
தமிழ் காமிக்ஸ் வாழ்க.
BOUM
யாருடா ஜாஸ்ரா பாய்ஸ். இதோ வரோம்டா.
பாய்ஸ் எத்தனை கமெண்ட் போடுறோம்னு எண்ணி வெச்சிக்கோங்க.
இன்னைக்கு போடுற கமெண்ட்ல இனிமே பலாக் பக்கமே வரக்கூடாது.
உனக்கு என்ன திமிர் இருந்த டெக்ஸை மஞ்ச மாக்கான்னு கிண்டல் பண்ணுவ
யார்ரா அவன் எடிடாபா நான் பண்ணுறேன்னு புரளி கிளப்பினவன்
நான் இல்லீங்க..
ஐயோ சாமி விட்டுடுங்க.
விடாதீங்க அவங்கள..
அப்படியே அமுக்குங்க.
அம்மே.
ஆத்தி-
ஜெய் ஜெயமாலினி.
மீ த 1245 கமெண்ட்ஸ்
மீ த 5421 கமெண்ட்ஸ்
அப்பா கமெண்ட் போட்டு போட்டு கை வலிக்குதுப்பா.
எனக்கு டேட்டா தீந்து போச்சு. ரீசார்ஜ் பண்ணிட்டு வந்துடுறேன்.
சின்ன தம்பி க்ரூப் உள்ள வர வரைக்கும் நாமதான் சமாளிக்கணும்.
காமிக்ஸ் புக்குல இருந்து ஒரு பேப்பர் கூட அவிங்களுக்கு கிடைக்க கூடாது.
ரீசார்ஜ் பண்ணிட்டு வரதுக்குள்ள போர் மோர் பண்ணிட்டிங்களேயா..
நாம ரொம்ப நேரம் தாக்குப்பிடிக்க முடியாது. எனர்ஜியெல்லாம் தீர போகுது.
ஆமா வள்ள நடம் ஆயிடுக்க இன்னும் நம்ம பசங்களை காணோம்.
ஸ்டால் அலங்கரிக்க வேண்டிய பணிகள் இருக்கு. சின்ன தம்பி எங்க போனான்?
DOING DOING DOING



அந்த பக்கம் ப்ளாகில் மிகப்பெரிய போர் நடந்து கொண்டிருக்க.. ஆடி பெருக்கு விழாவை நிறைவு செய்து பேரிக்காய் சாப்பிட்டுவிட்டு புது தெம்போடு போர்க்களம் நோக்கி விரைந்தனர் சின்ன தம்பியும், சக வாசகர்களும்
நண்பர்களே அவங்க அனுப்புற மொட்ட கடுதாசிய கண்டு பயந்துடாதீங்க.
கடுதாசியா அது? ஏகப்பட்ட எழுத்து பிழை..
இவங்கதான் காமிக்ஸை குறை சொல்ல வராங்களாக்கும்!
இப்படிக்கா போ..
அப்படிக்கா போ..
தாக்கு அட்டாக்கு..
BOUM
BOUM
BOUM
BOUM
மீ டூ 747
இதோ வந்துட்டோம் மாஸ்டர்.
ஜெய் மாடஸ்டி..
எல்லாரும் சண்டை போடுறாங்க.. வா நாமளும் கமெண்ட் போடலாம்.
லக்கி லூக் வாழ்க
க்ளிப்டனுக்கு ஜே
சிக்பில்க்கு ஜே
லக்கி லூக் வாழ்க
நம்மாளுக தீம் மியூசிக் அம்சமா இருக்கு..
மாமரத்து..
அடியிலே..
மாடஸ்டி..
மஞ்ச சட்டை வீரன்.
மடியிலே..
..மனதிலே..
ஐயோ..




கொஞ்சம் கூட இங்கிதம் இல்லாதவங்க.
அடி தான்.
BOUM
ஆமா..
ஏதோ டயர்டா இருக்குதுபா.. ஸ்னாக்ஸ் கொஞ்சம் குடுங்க..
ஏதோ அடிக்கலாம் தோஸ்த்..
தோ அங்க பாருங்க கேப்டன் பெரியசாமி
அவர் கையில என்னவோ பூ இருக்கே
சிங்கத்தின் சிறு வயதில்
அங்க பாருங்க சின்ன தம்பி கரும்.
ஹாய் ப்ரோ நலமா?
சூப்பரா இருக்கேன் ப்ரோ
கரோட்டில் ரூம் போடுறவங்க இங்கே வாங்க.
அண்ணாச்சியே கூப்புடுறார் வாங்க போகலாம்..
எனக்கு சந்தோஷம் தாங்கல..
ஸ்பெஷல் வெளியீட்டுக்காக இப்பவே மனம் அடிச்சிக்குது..
போலி நடிகர்கள் ஒழிக
ஆமாம் ஒழிக.
ப்ரோ இந்த வாட்டியும் ஸ்டிக்கர் அடிச்சிருக்கீங்களா?
இவங்களை அடிக்கவே நேரம் சரியா போயிடுச்சு ப்ரோ..
சரியா சொன்னீங்க..
பல லோட் மோர்களை கடந்து போக் வாசகர்களும், ஃபேஸ்புக் வாசகர்களும் சந்தித்து கொண்டனர்.
செம பண்ணிட்டீங்க கேப்டன்..
சின்ன தம்பி கலக்கிட்டடா அம்பி!
ஹிப்பீ..
உங்களை நேரில் பார்த்ததில் சந்தோசம் சார்
அடங்கோ
ஹிப் ஹிப் ஹுர்ரே...
சீக்கிரம் வாங்க.. பழைய காமிக்ஸும், பாப்கார்னும் காத்து கிடக்கு.


நம்ம போலி ஐடி திட்டங்கள் அனைத்தும் டேமேஜ் ஆயிடுச்சே
நம்ம போலி ஐடில இருக்கறதால நம்மள கண்டுபிடிக்க முடியாம விட்டுட்டாங்க..
அடேய் பீத்தல் பெரியசாமி உன் நல்ல உள்ளம் தெரியாம குறுப்ப திட்டிட்டேன். மன்னிச்சிடு..
விடுடா கும்பர்சி..
சரி இவங்க கப்பல்களை என்ன பண்றது..
அதையெல்லாம் காயலான் கடையில போட்டு காமிக்ஸ் வாங்கிடலாம்.
காயலான்கடையில் நிறைய காமிக்ஸ் ... அதையும் வாங்கிடுவோம்
ஓ கே கேப்டன்.. பாய்ஸ் கமான்.!
நமக்கு காயலான் கடைக்கு போற வேலை இருக்கு.
சீக்கிரம் வரேன்னு வீட்டுல சொல்லிட்டு வந்தேன்..
இன்னைக்கு வீட்டம்மா கும்ம போகுது..
அதை வேற ஏன்யா ஞாபகம் படுத்துறீங்க..
வேலைய கவனி!
சிதறி கிடந்த படகுகளையும், பழைய காமிக்ஸ்களையும் சேர்த்து கொண்டு சிதோட்டின் கரைகளை அடைந்தது அந்த சிறு காமிக்ஸ் வாசகர் வட்டம்.
எலேய் சின்ன தம்பி.. இன்னைக்கு பீட்டுங்கல ஏதோ சர்ப்ரைஸ் புக் இருக்காமே.. கேப்டன் ப்ரின்ஸ் குண்டு புக்கா இருக்கும் னு நெனைக்கேன்.
ப்ரின்ஸ் புக்கெல்லாம் ஏற்கனவே ஒரு ரவுண்டு போட்டாச்சு கேப்டன். பகல் கனவு வேணாம்.
அதெல்லாம் வரும்பா..
என் தலைவன் டெக்ஸ் புக்குதான் இன்னைக்கு வருது... அடுத்த தடவை 10000 பக்கம் உள்ள குண்டு புக் கேக்கலாம்னு இருக்கேன்.
ஆமா கேப்டன்.. ப்ரின்ஸ் கதைகள் இனிமே நஹியாம்!


அடங்கோ
எலேய் கும்புர்கி..
என்னையா இப்பதான் ஸ்டால் போடுறீங்க. மீட்டிங் எப்போ?
10 மணிக்குப்பா..!
ஸ்னாக்ஸை கொண்டு போய் மீட்டிங் ஹால்ல வெச்சிட்டயா?
அந்த கலகலக்கும் புத்தகவிழா கூட்டத்தை பாரேன் பெரியசாமி.. ரம்மியமா இருக்குதுல்ல?
என்ன ஸ்பெஷல்?
ஆடி பெருக்காச்சே! சைவம்தான்!
வீட்டம்மா என்ன தேடி வந்துட கூடாது
உன்னைய பெரிய வீரன்னு நினைச்சேன்.
நான் இதுக்காகதான் வீட்டம்மாவை அழைச்சிக்கிட்டு வந்துட்டேன்
ஒரு லைவ் போட்டுட்டு வந்துடறேன்.
ஆஹா இந்த அளப்பரிய காமிக்ஸ் நேசத்தை பாக்கறச்சே எனக்கு புல்லரிக்குது கேப்டன்.
நல்லவேதான் இருக்கு எனக்கு புடிச்ச வெளியீடுகள் ஏதுவும் வரலியே
கவலை வேணாம் கேப்டன். தள்ளுபடில கிடைக்கிறத அள்ளிக்கிட்டு போகலாம்.
டேய் பெரியசாமி உனக்கோசரம் காமிக்ஸ், ஸ்னாக்ஸ், டீ கர்ட்லாம் வெச்சிருக்கோம் வந்து பாரேன்.
உங்களுக்கு மட்டும் மீட்டிங்கு முன்னாடியே தர்றோம்
என்ன ஓகே வா?
ஆஹா நெய் மைசூர் பாக்கு வாசம் மூக்கை துளைக்குதே!
PPB.42


ஸ்னாக்ஸ், ஸ்டிக்கர், டீ சர்ட்டுகளாய் மகிழ்ச்சியில் குத்தாட்டம் போட்டனர் புதிய வாசகர்கள்
ஆஹா.. டெக்ஸ் வில்லர் ஸ்டிக்கரு! வீடு பூரா ஒட்டி வெச்சிட வேண்டியதுதான்!
ஆஹா சூடான தலையான தேநீர்
இந்த தொப்பியில பாக்க டெக்ஸா மாதிரி இருக்கேனா?
இதை பாருங்க பேழையில் ஒரு வாள்!!
இது என்னன்னே தெரியலியே!
காமிக்ஸ் வீட்டுக்கு வந்த குழந்தை மாதிரி ரொம்ப பேஜார் அடிக்குதுப்பா..
அதே சமயம் தீவுக்குள் ஸ்டால் அமைக்கும் பணிகள் மும்முரமாக நடந்து கொண்டிருந்தன.
வழக்கம்போல நம்ம ஸ்டால் முன்னாடியே கூட்டம் குவிய போகுது!
அந்த காமி மைதானம் சிறிது நேரத்தில் புத்தகவிழா அரங்காக ஜொலித்தது.
மஞ்ச கவர்தான் ஸ்டாலுக்கு பொலிவை தரும்.. டெக்ஸ் புக்கை முன்னால அடுக்குங்க
மாமரத்து அடியிலே.. மாட்டடி மடியிலே
பாய்ஸ் வாங்க பார்ட்டி கூட குடிக்கலாம்.
ஆஹா பார்ட்டி டையா?
எனக்கு நம்ம தீம் சாங் பாடணும் போல இருக்கு
மேல ஏறி பாடுவே!
La-haut sur la montagne...
தீம் சாங்கை கேட்டதும் ரசிகர்கள் மத்தியில் உற்சாகம் பரவத் தொடங்கியது.
ஆஹா என்ன ஒரு இனிமை தரும் காலம்
புது நண்பர்களை பார்ப்பது ஜாலியாக இருக்கு
நண்பர்களோடு தாகசாந்தி செய்க்கலாமா?
அதெல்லாம் ஒன்னும் தேவையில்லை!
வீட்டுக்கு போக போறதில்ல.. நாம இங்கேயிருந்து கோலமா செல்லப்போறோம்
யார்னா உள்ள இருக்கீங்களா?
PPB43


உங்களை பாக்க பல நண்பர்கள் வெறியோடு காத்து கிடக்காங்க
உங்களைதான் மீட்டிங்கு கெஸ்ட்டா போட்டிருக்கோம்.
இறுதியாக எல்லாரும் இணைய மீட்டிங் குறாவானது.
C'est
SANTÉ
மாமரத்து அடியிலே.., மாடஸ்டி மடியிலே
மாமரத்து அடியிலே.., மாடஸ்டி மடியிலே
அடுத்த மீட்டிங்ல பாப்போம் பிரோ!
நெஞ்சே கணமா இருக்குதுப்பா!
மீட்டிங் முடிந்து கணமான நெஞ்சங்களுடனும்,
ALEXANDER
DUM
DUNGEDUMDUM
FIN
COLOURS BY LUCE